# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## தயா சரண அபிவிருத்தி மன்றம்
## (கூட்டிணைத்தல்)

**தயா சரண அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*காலி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (டாக்டர்) துஸிதா விஜேமான்ன அவர்களால் 2016, சனவரி மாதம் 26 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2015, திசெம்பர் மாதம் 07 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

**[ 70 ஆம் சட்டமூலம் ]**

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

## தயா சரண அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்)

### தயா சரண அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கான தொரு சட்டம்

முன்னுரை.

"தயா சரண அபிவிருத்தி மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றம் ஒன்று உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்திற்கென இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட மன்றமானது எந்தப்பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும் அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், விண்ணப்பத்தை அனுமதித்தல் பொது மக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின்    ஆம் இலக்க, தயா சரண அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

தயா சரண அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும், அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தயா சரண அபிவிருத்தி மன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன் பின்னர் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "தயா சரண அபிவிருத்தி மன்றத்தின் பெயரின் கீழும் மகுடத்தின் கீழும் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாக இருத்தல் வேண்டும்.

அத்துடன் அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினை ஒன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் அத்தகைய முறையில் அந்த இலச்சினையை மாற்றவும் முழுத் தத்துவமும் அதிகாரமும் பெற்றதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. எந்தப் பொதுக் குறிக்கோள்களுக்காக கூட்டுத்தாபனம் அமைத்து உருவாக்கப்படுகின்றதோ அந்த பொதுக்குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) சமய, கலாசார, கல்வி மற்றும் பொருளாதார ஒருங்கிணைப்பு ஊடாக இடப்பரப்பு உள்ள இளைஞர்களுக்கிடையில் சமய ஒருமைத்துவம், பரஸ்பர புரிந்துணர்வு, ஆன்மீக அபிவிருத்தி, நல்லெண்ணம் மற்றும் நட்புறவு என்பவற்றை முன்னேற்றுதல் ;

(ஆ) இடப்பரப்பிலுள்ள மக்களின் நலன்புரி, அக்கறைகள், பாதுகாப்பு, ஒருங்கிணைப்பு மற்றும் அந்தஸ்து என்பவற்றை பாதுகாத்தல், ஆதரவளித்தல் மற்றும் உறுதிப்படுத்துதல் ;

(இ) உடல்வலுவூட்டல் பயிற்சி உட்பட இளைஞர் அபிவிருத்தி நிலையங்கள் ஊடாக இளைஞர்களின் பௌதிக நலன்புரி மற்றும் தனியாள் அபிவிருத்திக்கு ஏற்பாடு செய்தல் ;

(ஈ) போட்டியை எதிர்கொள்ளும் பொருட்டு தொழில் தேடுவதில் அவசியமான தேவைப்பாடுகளை எய்தும் பொருட்டு அவர்களுடைய ஆட்தகைமை மட்டங்களை விருத்தி செய்வதில் பல்வேறு வகைப்பட்ட துறைகளில் அவசியமான பயிற்சியை வழங்குவதன் மூலம் மேலதிக கல்விக்கான ஆதரவை வழங்குதல் ;

(உ) தகுதியான தொழிலைத் தேடுவதற்கான அவர்களுடைய இறுதியான இலக்கைநோக்கி அவர்களின் திறன்களை விருத்தி செய்வதற்கு இளைஞர்களுக்கு காலக்கிரமமான தொழில்நுட்ப பயிற்சி முகாம்களை வைத்திருத்தலும் நடாத்துதலும் ;

(ஊ) தொழிலுக்காக இளைஞர்களை கல்வியறிவு ஊட்டி பயிற்சி வழங்கும் நோக்கம் ஒன்றுடன் மத்திய நகரங்களில் தச்சு வேலை, கட்டட வேலை மற்றும் வேறு ஏதேனும் தகுதியான தொழிற்பயிற்சி பாடசாலைகளைத் தாபித்தல் ;

(எ) மோட்டார் வாகனங்களைத் திருத்துவதில் இளைஞர்களைப் பயிற்றுவிக்கும் பொருட்டு இடப்பரப்பிலுள்ள மோட்டார் தொழில்நுட்ப பயிற்சி நிலையங்களைத் தாபித்தலும் (பழுது பார்க்கும் இடம்) தொழிற்றுறையில் உயர்தொழிலர்களால் காலக்கிரமமான விரிவுரைகளை நடாத்துதல் ;

(ஏ) இடப்பரப்பிலுள்ள தகைமையுடைய இளைஞர்களிடமிருந்து விண்ணப்பங்களுக்கான வசதியினை ஏற்படுத்துவதற்கு மத்திய அரசாங்கத்தின்கீழ் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துடன் ஒருங்கிணைதல் மற்றும் தகுதியான வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை அவர்களுக்குப் பரிந்துரைத்தல்;

(ஐ) வேலை தேடுவதற்கு அவசியமான சர்வதேச மொழியில் (ஆங்கிலம்) கிராமிய இளைஞர்களின் அறிவையும் பேச்சுத்திறமையையும் உயர்த்துவதற்காக மாலைநேர, வார இறுதிநேர வகுப்புக்களை நடாத்துதல் ;

(ஒ) அவர்களுடைய கல்வித் தகைமைகள் தராதரங்கள் மற்றும் அனுபவத்துடன் தகுதியான தொழிலைத் தேடும்பொருட்டு அவர்களின் கல்வித் தகைமைகளுடன் ஒருங்கிணைந்து இடப்பரப்பிலுள்ள இளைஞர்களின் தரவுகளைச் சேகரிக்கின்ற வேலைவாய்ப்பு வங்கி ஒன்றைத் தாபித்தல் ;

(ஓ) சுயதொழிலுக்காக இளைஞர்களுக்கு அவர்களுடைய தனிப்பட்ட திறன்களை அபிவிருத்தி செய்வதற்கு நிதி ரீதியாகவும் வேறுவகையிலும் ஊக்குவித்தல், மதியுரை செய்தல், உதவுதல் மற்றும் துணைபுரிதல் மற்றும் அச்சுயதொழிலில் ஈடுபட்டுள்ள ஆட்களின் உற்பத்திகளுக்கு சந்தைகளைத் தேடுதல் ;

(ஔ) கமத்தொழில், கைத்தொழில், தொழினுட்பம் மற்றும் வேறு இணைந்த துறைகளில் சாத்தியக் கூறு வளகற்கையை பொறுப்பேற்பதற்கும் இடப்பரப்பிலுள்ள மக்களின் பொதுவான பொருளாதாரம் மற்றும் சமூக நலன்புரியை ஊக்குவித்தல் ;

(க) இளைஞர்களுக்கு அவர்களுடைய வாழ்க்கைத் தராதரங்களை உயர்த்தும் நோக்கமொன்றுடன் சுயதொழிலுக்கான குடிசைக் கைத்தொழிலை தொடங்குவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் உதவுதல் மற்றும் துணை புரிதல் ;

(ங) இடப்பரப்பிலுள்ள கமத்தொழில் மற்றும் கைத்தொழில் திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கு வசதியளிப்பதற்கும் இளைஞர்களுக்கு கமத்தொழில் உபகரணம் அல்லது இயந்திரத்தை வழங்குதல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**4**. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்துக்கமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றின் ஏதேனும் ஒன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தகையதுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும் மற்றும் காரியங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும்.

(அ) ஏதேனும் நாட்டில் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கு வெளியில் கூட்டுத்தாபனத்தினைப் பதிவு செய்வதற்கு பிரகடனப்படுத்துதல் அல்லது வேறு வகையில் வலுவூட்டுவதற்கு அல்லது பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு ;

(ஆ) இலங்கையில் அல்லது வேறு இடத்தில் நன்கொடையாயாளர்களிடமிருந்து காசாகவோ அல்லது பொருளாயினும் சரி மானியக் கொடைகள், கொடைகள், நன்கொடைகள் மற்றும் ஒப்பப்பணங்களைப் பெற்றுக் கொள்வதற்கு அல்லது சேகரிப்பதற்கு ;

(இ) நன்கொடைகள் வேறுபட்ட காட்சிகள் அரச சார்பற்ற ஒழுங்கமைப்புகள் மற்றும் வேறு வழிகள் மூலம் நலன் விரும்பிகளிடமிருந்து குறிக்கோள்களை எய்துவதற்காக அவசியமான நிதியங்களைச் சேகரிப்பதற்கு ;

(ஈ) மேலேயுள்ள குறிக்கோள்களை எய்துவதற்கான தடைகளை அகற்றுவதற்கு நீதியானதும் நெறிமுறையானதுமான படிமுறைகளை எடுப்பதற்கான பொறுப்பெடுத்தல் ;

(உ) ஏதேனும் அசையும் ஆதனத்தை கொள்வதற்கு, குத்தகைக்கு எடுப்பதற்கு அல்லது மாற்றுவதற்கு வாடகைக்கு அல்லது வேறு வகையில் கொள்வதற்கு அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கு அவசியமானவாறான அல்லது உசிதமான ஏதேனும் உரிமைகள், சிறப்புரிமைகள் மற்றும் கூட்டுத்தாபனத்தின் வேலைக்கு தேவைப்படுத்தப்படும் ஏதேனும் கட்டடங்களை நிர்மாணித்தல், பேணுதல் மற்றும் மாற்றம் செய்தல் ;

(ஊ) அசையும் அல்லது அசையாச் சொத்துக்களின் வர்த்தகத்திலுள்ள பங்குகளின் கைத்தொழில் மற்றும் வங்கித் தொழில் முயற்சிகள் என்பவற்றின் எல்லா வடிவங்களையும் பெற்றுக்கொள்வதற்கு, கொள்வதற்கு, விற்பதற்கு அல்லது கொள்வனவு செய்வதற்கும் உறுதி மூலம், இறுதி விருப்பாவணம் மூலம் அல்லது மரண சாசனக்கொடை மூலம் ஆதனத்தை ஏற்றுக்கொள்ளுதல்;

(எ) இலங்கையிலாயினும் சரி அல்லது வேறிடத்திலாயினும் சரி ஒத்த செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள வேறு ஆட்களிடமிருந்து அல்லது ஒழுங்கமைப்புகளிடமிருந்து ஒருங்கிணைந்து செயற்படுதல் உதவுதல், உதவியைப் பெற்றுக் கொள்ளுதல் ;

(ஏ) தொடர்புபட்ட வேறு ஒழுங்கமைப்புகளுடன் ஒருங்கிணைப்பை பேணுதல் மற்றும் கூட்டுத்தாபனத்தின் நோக்குகளையும் குறிக்கோள்களையும் முன்னெடுத்துச் செல்வதில் இலங்கையில் அல்லது வேறிடத்தில் ஆட்களுடன் அல்லது ஒழுங்கமைப்புகளுடன் உடன்படிக்கையில் ஈடுபடுதல் ;

(ஐ) இலங்கையிலாயினும் சரி அல்லது வேறிடத்திலாயினும் சரி எவரேனும் ஆளுடன், அரசாங்கத்துடன், ஒழுங்கமைப்புடன் அல்லது கம்பனியுடன் உடன்படிக்கையில் ஈடுபடுதல் ;

(ஒ) ஏதேனும் வங்கியுடன் அல்லது வேறு ஒத்த நிறுவனங்களுடன் நடைமுறை, சேமிப்பு மற்றும் வைப்புக் கணக்குகளைத் திறத்தல் மற்றும் பேணுதல் ;

(ஓ) காலத்திற்குக்காலம் தீர்மானிக்கப்பட்டவாறான பிணைப் பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மீது கூட்டுத்தாபனத்தின் நோக்கத்திற்காக பணத்தைக் கடனெடுத்தல் ;

(ஔ) கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவத்தின் முறைமையை வரையறுப்பதில் விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளை ஆக்குதல், நீக்குதல், மாற்றுதல் அல்லது திருத்துதல் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு அவசியமான எல்லாத் துணைச் சட்டங்கள் அல்லது கட்டளைச் சட்டங்கள் மற்றும் அதன் அலுவல்களின் நடத்தை மற்றும் அதன் செயற்பாடுகளின் பல்வேறுபட்ட கிளைகள் ;

(க) இடைநேர்விளைவான அல்லது தொடர்புபட்டவாறான காலத்திற்குக் காலம் அத்தகைய வேறு சட்டரீதியான விடயங்களை பொதுவாக பொறுப்பு முயற்சி எடுத்தல் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் எண்ணங்கள் மற்றும் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்காக அவசியமான வையாக கருப்படுதல் வேண்டும் ;

(ங) அதன் நோக்கங்களுக்கு உடனடியாகத் தேவைப்படுத்தப் படாத கூட்டுத்தாபனத்தின் பணங்களை முதலீடு செய்தல் அல்லது விதிக்கப்பட்ட அல்லது தேவைப் படுத்தப்பட்ட சட்டத்தின் மூலம் காலத்திற்குக் காலம் அத்தகைய நிபந்தனைகளுக்கு ஒருபோதும் அமையாத பொருத்தமானதென எண்ணக்கூடியவாறான அத்த கைய முதலீடுகள், பிணைகள் அல்லது ஆதனத்தின் மீது ;

(ச) நாணயமாற்று காசோலைகள், வாக்குறுதிப்பத்திரங்கள் மற்றும் வேறு கைமாற்றத்தகு சாசனங்கள் அல்லது பிணையங்களை ஆக்குதல், வரைதல், ஏற்றுக் கொள்ளு தல், கழிப்பனவு செய்தல், பேசித் தீர்த்தல், வாங்குதல், விற்றல் மற்றும் வழங்குதல் ;

(ஞ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை பூர்த்தி செய்வதற் கும் எய்துவதற்கும் அவசியமானவாறான இடைநேர் விளைவான அல்லது நன்மை பயக்கக்கூடியவாறான அத்தகைய வேறு செயல்களையும் செய்தல்.

செயற்பாடு களின் முகாமைத்துவம்.

**5.** *(1)* முகாமைத்துவமானது பதினைந்துக்கு மேற்படாத உறுப்பினர்களின் எண்ணிக்கைகளைக் கொண்ட முகாமைத்துவக் குழுவொன்றினால் செய்யப்படுதல் வேண்டும். அது கூட்டுத் தாபனம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய கடமை களை நிறைவேற்றுவதற்கு இது தலைவர், பிரதி தலைவர், நிருவாகச் செயலாளர், பொருளாளர் மற்றும் அத்தகைய அலு வலர்கள் மற்றும் பணியாட்டொகுதியினரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) தாபக உறுப்பினரான திரு. தயா தர்மபால கிலிதுல கமகே என்பவர் முகாமைத்துவக் குழுவுக்கு முதலாவது தலைவர் ஆக்கப்படுதல் வேண்டும். முகாமைத்துவக் குழுவின் ஏதேனும் சாதாரண வெற்றிடமொன்று ஏற்படும் போது அதனது அடுத்த கூட்டத்தில் பொதுக் குழுவின் தீர்மானத்துக்கு அமைய அதனது குழுவினால் நிரப்பப்படுதல் வேண்டும். முகாமைத்துவக் குழுவொன்றின் கூட்ட நடப்பெண் குழுவின் உறுப்பினர்களின் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைத்துவக் குழுவானது இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னரான நாளன்று பதவி வகிக்கின்ற மன்றத்தின் முகாமைத்துவக் குழு ஒன்றாக இருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6**. காலத்துக்குக்காலம் கீழே தரப்பட்டுள்ள எல்லா அல்லது ஏதேனும் கருமம் ஒன்று தொடர்பில் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் ஏதேனும் பொதுக் கூட்டத்திலும் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டுக்குக் குறையாத பெரும்பான்மையொன்றைக் கொண்டு இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராக விதிகளை ஆக்குவது கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) முகாமைத்துவக் குழுவின் உறுப்பினர்களின் தெரிவு நியமனம் அல்லது பெயர் குறித்த நியமனம் மற்றும் அவர்களுடைய தத்துவங்கள், கடமைகள் மற்றும் பதவிக்காலம் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறுபட்ட அலுவலர்கள், முகவர்கள் மற்றும் சேவையாளர்களின் நடத்தை, கடமைகள் மற்றும் பணிகளின் தத்துவங்கள்;

(இ) கூட்டுத்தாபனத்தின் மற்றும் முகாமைத்துவக் குழுவினதும் கூட்டங்களை அழைப்பதற்கும் கூட்டங்களை நடத்துவதற்கும் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறை, அத்தகைய கூட்டங்களின் நேரம், இடம், அறிவித்தல், நிகழ்ச்சி நிரல் மற்றும் அத்தகைய கூட்டங்களின் கூட்ட நடப்பெண் மற்றும் பொது நடத்தை;

(ஈ) கூட்டத்தினது முகாமைத்துவச் சபையினது உறுப்பாண்மைக்கான தகைமை மற்றும் தகைமையீனங்கள்;

(உ) கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களின் நிருவாகம், முகாமைத்துவம் மற்றும் கட்டுக்காப்பு மற்றும் அதன் நிதியங்களினதும் கணக்குகளதும் பேணல் கணக்காய்வு;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் பொது நிருவாக மற்றும் குறிக்கோள்களினை உணருதலும்;

(2) மேலே (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஏதேனும் அத்தகைய விதியானது ஆக்கப்படும் போது அது ஆக்கப்படுவது போன்ற முறையில் மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம், திருத்தப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் விதிகள் இச்சட்டம் தொடங்குகின்ற திகதிக்கு நேர்முந்திய நாளன்று அமுலில் இருத்தல் வேண்டும் என்பதுடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுடன் முரண்படாதிருத்தல் வேண்டுமென்பதுடன் இப்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தபானத்தின் விதிகளாக கருதப்படுதல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் அப்போதைக்கான கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்ததாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய விதிகள் மாற்றவும்படலாம், சேர்க்கவும்படலாம் அல்லது இரத்துச்செய்யவும்படலாம்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**7**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது முகாமைத்துவக் குழுவின் தீர்மானமொன்றின் அதிகாரத்தினால் அன்றி ஏதேனும் சாதனமொன்றுக்கு பொறிக்கப்படுதலாகாது என்பதுடன் அந்நோக்கத்துக்காக தலைவரினால் மற்றும் செயலாளரினால் அல்லது வேறு சில இரண்டு உறுப்பினர்களின் கையொப்பமொன்றின் மூலம் அதிகாரமளிக்கப்படுதல் வேண்டும்.

*மன்றத்தினால் செலுத்தப்பட வேண்டிய தனிசுகள் மற்றும் மன்றத்துக்குச் செலுத்தப்படற் பாலனவுமான தனிசுகள்.*

**8.** இச்சட்டம் தொடங்குகின்ற தேதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்தின் எல்லாத் தனிசுகளும் பொறுப்புகளும் இத்தால் அமைத்துருவாக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அந்நாளன்று மன்றத்துக்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும், ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கத்துக்காக கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**9.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் ஏதேனும் வெளிநாட்டு அல்லது பகிரங்க உள்ளூர் அல்லது தனி அதிகாரம் அல்லது தனி ஆளினால் கூட்டுத்தாபனத்துக்கு அளிக்கப்பட்ட அல்லது நன்கொடை அளிக்கப்பட்ட எல்லாப் பணத் தொகைகளும் அத்துடன் அதன் அலுவல்களை கொண்டு செல்வதில் கூட்டுத்தாபனத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்துக்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் நிதியங்கள் உடனடியாக அவசியமற்றதாகவிருக்குமிடத்து ஏதேனும் வங்கியில் அல்லது வேறு ஏதேனும் நிறுவனத்தில் வரவு வைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வைப்புகள் மீது வட்டியின் மூலம் கொண்டு செல்லப்படுதல் வேண்டுமென்பதுடன் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

(3) குழுவானது கூட்டுத்தாபனத்தின் அல்லது எவரேனும் மூன்றாம் திறத்தவரின் ஏதேனும் தனிசு பொறுப்புடமை அல்லது கடப்பாட்டுக்காக பணத்தினைக் கடனெப்பதற்கு அல்லது பிணைப்பொறுப்பொன்றாக ஏதேனும் ஆதனத்தின் அல்லது அதன் பாகத்தினை அடகு வைப்பதற்கு அல்லது பொறுப்பு முயற்சியெடுப்பதற்கு கூட்டுத்தாபனத்தின் எல்லாத் தத்துவங்களையும் பிரயோகிக்கலாம்.

(4) கூட்டுத்தாபனத்தினால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தை ஈடுசெய்வதற்கும் அதன் அலுவல்களை கொண்டு செல்வதில் அல்லது பணிகளையும் கடமைகளையும் பிரயோகிப்

பதிலும் நிறைவேற்றுவதிலும் அல்லது அதன் குறிக்கோள் களையும் நோக்கங்களையும் முன்னெடுத்துச் செல்வதற்கும் தேவைப்படுத்தப்பட்ட எல்லாப் பணத் தொகைகளும் நிதியத்தி லிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் வங்கியுடன் அல்லது வங்கிகளுடனும் கூட்டுத்தாப னத்தின் வங்கி கணக்கு அல்லது கணக்குகள் திறக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் முகாமைத்துவக் குழுவின் தலைவரினால் அல்லது பிரதி தலைவரினால் அல்லது பிரதி தலைவர் அல்லது செயலாளர் மற்றும் பொருளாளர் என்பவர்களுடன் ஒருங்கி ணைந்து எல்லாக் காசோலைகளும் வரைந்து கையொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன் புறக்குறிப்பிடப்படுதலும் வேண்டும்.

இப்பந்தியில் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் என்னும் சொற்கள் எவரேனும் பதில் தலைவர், செயலாளர் அல்லது பொருளாளர் என்பவர்களையும் உள்ளடக்குதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

**10.** (1) கூட்டுத்தாபனமானது, அதன் வருமானத்தின் மற்றும் செலவினத்தினதும் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல், வாங்கல்களி னதும் முறையான கணக்குகளைச் செய்வித்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகளின் புத்தகங்கள் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் வைத்திருக்கச் செய்தல் வேண்டும் என்பதுடன் கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொரு உறுப்பினரதும் பரிசோதனைக்கு வைத்திருத்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனமானது ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் நியமிக்கப்பட்ட வேண்டிய எவரேனும் தகைமை பெற்ற பகிரங்க கணக்காய்வாளர் அல்லது கண்ககாய்வாளர்களினால் ஒவ்வொரு கணக்காய்வு ஆண்டுக்கும் அதன் கணக்குகளை கணக்காய்வு செய்தல் வேண்டுமென்படன் கூட்டுத்தாபனத்தின் கணக்காய் வாளர்கள் கூட்டுத்தாபனத்தின் கணக்குகளை பரிசோதித்தல் வேண்டுமென்பதுடன் அவர்களின் மூலம் கணக்குகளின் மீது அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அறிக்கை யானது குறிப்பிடுதல் வேண்டும் :-

(அ) அவர்களின் மூலம் தேவைப்படுத்தப்பட்ட எல்லா தகவல்களையும் விளக்கங்களையும் அவர்கள் பெற்றுக் கொண்டாலும் சரி அல்லது பெற்றுக்கொள்ளா விட்டாலும் சரி அத்துடன்

(ஆ) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் அதன் அலுவல்களின் உண்மையானதும் நியாயமானதுமான நோக்க மொன்றுக்கு வெளிப்படுத்துவதற்கு முறையாக செய்யப் படுகின்றதாயினும் சரி ;

(இ) கணக்குகள் முகாமைத்துவக் குழுவொன்றின் கணக்காய் வினதும் அங்கீகாரத்தினதும் பின்னர் அதன் சட்ட பெறுமதியைக் கொண்டிருக்கும் ;

பந்தியில் "தகைமை பெற்ற கணக்காய்வாளர்" என்பது -

(அ) தனியாள் ஒருவர் இலங்கைப் பட்டயம் பெற்ற கணக்காளர்களின் நிறுவகத்தில் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் அல்லது அத்தகைய நிறுவகத் தினால் வழங்கப்பட்ட கணக்காளர் ஒருவராக தொழில் புரிகின்ற சான்றிதழொன்றைக் கொண்டிருக்கின்ற உறுப்பினரொருவராக இருக்குமிடத்து ; அல்லது

(ஆ) இலங்கைப் பட்டயம் பெற்ற கணக்காளர்களின் நிறுவகத்தில் அல்லது அத்தகைய நிறுவகத்தி னால் வழங்கப்பட்ட கணக்காளரொருவராக பயிற்சி பெறுவதற்கு சான்றிதழொன்றைக் கொண்டிருக்கின்ற சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொரு வராக உள்ளவிடத்து ஒவ்வொரு வதிவிடப் பங்காளர்களினதும் கணக்காளர்கள் குழும மொன்று.

*குடியரசினதும் ஏனையோர்களினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**11.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் இலங்கை குடியரசின் உரிமை களையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டி ணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**12.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*